7

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110212

1. District : மாவட்டம் Thanjavur PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 05/2020 Date: நாள் 20.10.2020.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19.10.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை between 11.30 hrs and 19.45 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.10.2020 Time நேரம் 08.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் F.I.R registered on 20.10.2020 at 09.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Type written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 9 km - North East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Block development office. Thanjavur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B. Naveenkumar (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் V. Boovaragan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1996 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Sales manager (g) Address : முகவரி No: 65, Sri rama krishna nagar. Vilar road, Thanjavur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. Balasubramaniyan - Block development officer - Thanjavur.
2. Tr. Rao - Assistant o/o the Block development office. Thanjavur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 20.10.2020 ம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தஞ்சாவூர் தாலுக்கா, விளார் ரோடு, ஸ்ரீராமகிருஷ்ணா நகரை சேர்ந்த B.நவின்குமார், த/பெ.V.பூவராகன் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: B.நவின்குமார், வயது 23, த/பெ.V. பூவராகன், 65, ஸ்ரீராமகிருஷ்ணா நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் விளார் ஸ்ரீ ராமகிருஷ்ணா நகரில் எனது மனைவி திவ்யஹர்சினி மற்றும் சமீபத்தில் பிறந்த பெண் குழந்தையுடன் வசித்து வருகிறேன். என்னுடன் எனது தாய், தந்தையும் வசித்து வருகின்றனர்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inspector of Police Rank ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS VQAC, Thanjavur ............ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Name: பெயர் V. Sasikala
Rank: நிலை Inspector of Police
VQAC, Thanjavur.

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20-10-2020 | 11.30 hrs.

நான் DME வரை படித்துவிட்டு தற்போது தஞ்சாவூர் தெற்கு வீதியில் உள்ள Sriram Chits -ல் Sales Manager ஆக கடந்த 2 வருடங்களாகப் பணிபுரிந்து வருகிறேன். எனது மனைவி A.M.திவ்யஹர்சினி B.E முடித்துள்ளார். அவர் தற்சமயம் கனரா வங்கி, அய்யம்பேட்டை கிளையில் Clerk ஆக பணிபுரிந்து வருகிறார். நான் தஞ்சாவூர் தாலுக்கா, நாஞ்சிக்கோட்டை ரோடு, பாத்திமா நகர், நேதாஜி தெருவைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் என்பவரது மனைவி G.ஆரோக்கியமேரி என்பவரிடமிருந்து தஞ்சாவூர் விளார் ரோட்டில் உள்ள பத்மநாபன் நகரில் மனை எண்.15-ஐ, 2400 சதுரடி காலிமனையை கிரயத்திற்கு வாங்கி அதை என் மனைவி A.M.திவ்யஹர்சினி பெயரில் கடந்த 17.09.2020ம் தேதி தஞ்சாவூர் எண்.I இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் Doc 4431/2020 ஆக பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்படி மனைக்கு எனது மனைவி பெயரில் DTCP Approval வாங்குவதற்காக தஞ்சாவூர் BDO Office சென்று கேட்டபோது, அங்கு Assistant ராவ் என்பவரை பார்க்கச் சொன்னார்கள். அதன்படி கடந்த 25.09.2020ம் தேதி அவரை பார்த்து விபரம் கேட்டபோது, அவர் முதலில் கூராய்வுக் கட்டணம் ரூ.500/- செலுத்தி, என் மனைவி பெயரில் விண்ணப்பம் எழுதிக்கொண்டு வரச்சொன்னார். அதன்படி கடந்த 28.09.2020ம் தேதி தஞ்சாவூர் BDO Office சென்று அவரைப்பார்த்தபோது, வரன்முறைக்கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் செலுத்த வேண்டி ஒரு கடிதக்குறிப்பு என்னிடம் கொடுத்தார். அதன் பிரகாரம் நான் என் மனைக்குரிய வரன்முறை கட்டணமாக ரூ.10,040/- ஐ State bank of India, வ.ஊ.சி நகர் கிளையிலும், வளர்ச்சிக் கட்டணமாக ரூ.5580/-ஐ தஞ்சாவூர் தெற்கு வீதியில் உள்ள Indian Overseas Bank-லும், மேலும் படைவீரர் கொடி நாளுக்காக ரூ.1000/- ஐ விளார்ரோட்டில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியிலும் கட்டிவிட்டு, மேற்படி தொகைகளை கட்டியதற்கான ஒரு மனுவையும், கட்டிய பணத்திற்கான original செலான்களையும் கொண்டுபோய் கடந்த 12.10.2020ம் தேதி BDO office-ல் Assistant ராவ் என்பவரிடம் கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்ட ராவ் இதற்கெல்லாம் செலவு செய்தால்தான் DTCP Approval order கையெழுத்தாகும் என்றும், இரண்டு நாட்களில் BDO Order கிடைக்கும் என்றார். அதன் பிறகு எனது சொந்த வேலைகாரணமாக உடனடியாக போக முடியாமல், நேற்று 19.10.2020ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் எனது மனு சம்மந்தமாக தஞ்சாவூர் BDO office சென்று Assistant ராவ் என்பவரைப் பார்த்து கேட்டபோது, அவர் உங்கள் மனைவி திவ்யஹர்சினி பெயரில் உள்ள மனைக்கு இன்னும் கையெழுத்தாகவில்லை என்றும், ரூ.5000/- பணம் கொடுத்தால்தான் உங்களது மனுவை ரெடி செய்து BDO-விடம் வைப்பேன் என்றும், மேலும் BDO ரூ.5000/- பணம் கொடுத்தால்தான் கையெழுத்து போடுவார் என்றும், இல்லாவிட்டால் வேலைநடக்காது என்றும் சொன்னார். மேலும் நாளை காலை ரூ.5000/- பணம் கொடுத்தால் Order-ல் கையெழுத்து வாங்கி

கொடுத்துவிடுவதாகக் கூறினார். அதற்கு நான், சார் தொகையை கொஞ்சம் கம்மி பண்ணலாமா என்று ராவ்விடம் கேட்டதற்கு, அதெல்லாம் முடியாது BDO-வுக்கு ரூ.5000/- கொடுத்தால்தான் அவர் கையெழுத்து போடுவார் என்று சொல்லிவிட்டார். மேலும் அவர் என்னிடம் வேண்டுமென்றால் நீங்கள் இன்று சாயந்திரம் 7 மணிக்குமேல் வந்து BDO-வை office-ல் பாருங்கள் என்றார். அவரிடமே நேரடியாக பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னதால், நான் மறுபடியும் 19.10.2020 மாலை சுமார் 07.30 மணியளவில் தஞ்சாவூர் BDO office போனேன். அங்கு போய் அங்கே நின்ற ஒருவரிடம் DTCP Approval வாங்க BDO - வை பார்க்கவேண்டும் என்று சொன்னதற்கு அதற்கு அவர் BDO அறையை காண்பித்தார், மேற்படி அறையின் நுழைவு வாயில் மேலே K.பாலசுப்ரமணியன், (கி.ஊ) என்று பெயர் பலகை இருந்தது. நான் அங்கு போனபோது Assistant ராவ் என்னைப்பார்த்து என்ன என்று கேட்டார். அவரிடம் நான் BDO -வை பார்க்கவேண்டும் என்று சொன்னவுடன், சிறிது நேரம் கழித்து சுமார் மாலை 07.45 மணி அளவில் BDO ரூமிலிருந்து ராவ் கதவைதிறந்து உள்ளே வா என்றுகூப்பிட்டார். உடனே BDO என்னை பார்த்து யார் இவர், இவர் file எங்கே என்று ராவிடம் கேட்டவுடன், ராவ் எனது File-ஐ எடுத்துக் கொடுத்தார். அதன் பிறகு ராவ் வெளியே சென்றுவிட்டார். மேற்படி BDO பாலசுப்ரமணியன் என்னிடம் Assistant ராவ் என்ன சொன்னார் என்று கேட்டார். அதற்கு நான் ரூ.5000/- பணம் கொடுத்தால்தான் DTCP Approval order ராவ் எழுதி BDO-விடம் கையெழுத்து வாங்கிக்கொடுக்க முடியும் என்று கூறுகிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் Assistant ராவ் கேட்டபடி ரூ.5000/- கொடுத்துவிடு என்று சொன்னார். நான் கொஞ்சம் பணத்தை குறைக்கலாமா என்று கேட்டதற்கு Assistant ராவ் சொன்னதை கொடுத்துவிட்டு DTCP order வாங்கிக்கொள்ளுங்கள் என்றார். பின்னர் BDO பாலசுப்ரமணியன், Assistant ராவ்-ஐ கூப்பிட்டு ரூ.5000/- பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்றார். அதற்கு நான் வேறுவழியில்லாமல் காலையில் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு என் வீட்டிற்கு சென்று என் மனைவியிடம் மேற்படி BDO பாலசுப்ரமணியன், Assistant ராவ் இருவரும் லஞ்சம் கேட்கும் விபரம் பற்றி கூறியபோது, அவரும் லஞ்சம் கொடுத்து DTCP order வாங்கவேண்டாம் என்றும், லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுங்கள் என்றும் கூறினார். எனக்கு மேற்படி BDO திரு.பாலசுப்ரமணியன் மற்றும் Assistant ராவ் கேட்ட ரூ.5000/- லஞ்சப்பணத்தை கொடுத்து DTCP Approval வாங்க விருப்பமில்லை. எனவே நான் மேற்படி BDO மற்றும் Assistant லஞ்சமாக கேட்டபணத்தை ஏற்பாடு செய்து இந்த புகாரை எழுதிக்கொண்டு வந்து கொடுக்கிறேன். அவர்கள் கேட்டபணம் ரூ.5000/- ஐ ஏற்பாடு செய்துகொண்டு வந்துள்ளேன். மேலும், இப்புகாருடன் நான், எனது மனைவி திவ்யஹர்சினி பெயரில் 28.09.2020ம் தேதி அன்று DTCP Approval வேண்டி

கொடுத்த விண்ணப்ப நகல், அதற்குரிய கூராய்வு கட்டணமாக ரூ.500/- கார்பரேஷன் வங்கியில் கட்டிய செலான் நகல், BDO அலுவலக வரன்முறை கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், படைவீரர் கொடிநாள் பணம் செலுத்தவேண்டிய கடிதக்குறிப்பு நகல், படைவீரர் கொடிநாள் பணம் ரூ.1000/- செலுத்திய ரசீது நகல் மற்றும் எனது மனைவி பெயரில் பெற்ற கிரயபத்திர ஆவணம் Doc.4431/2020-ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். எனக்கு DTCP Approval கொடுப்பதற்கு ரூ.5000/- லஞ்சமாக கேட்ட தஞ்சாவூர் BDO பாலசுப்ரமணியன் மற்றும் Assistant ராவ் ஆகியோர் மீது தக்கநடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) B.நவின்குமார்.20.10.2020. Sir, I have received the complaint on 20.10.2020 at 08.00 hrs and verified the genuineness of the complaint and antecedent of the accused officers and registered a case in Thanjavur V&AC.Cr.No.05/2020 U/s.7 of Prevention of Corruption (Amendment) Act 2018 against the accused officers on 20.10.2020 at 09.00 hrs.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

20/10/2020
Inspr of Police
V&AC Thanjavur